தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, நவம்பர் 12, வியாழக்கிழமை

ஐப்பசி 26, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

''ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாம் தலை.''

மேற்கொண்ட செயலைச் செய்து முடிக்க வல்லவரின் ஆற்றலை இகழாதிருத்தல், காப்பவர் செய்து கொள்ளும் காவல் எல்லாவற்றிலும் சிறந்தது.

1. வினாக்கள்—விடைகள்.

அ. உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர் நியமனங்களில் ஆதி திராவிடர்களுக்கு ஒதுக்கீடு.

61—(*வினா எண் 12650)—திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள மாவட்டங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நியமிக்கும்பொழுது ஆதி திராவிட வகுப்பினருக்கு ஒதுக்கீட்டின்படி மாவட்ட ஆட்சித் தலைவர் நியமனத்தில் கடைப்பிடிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): மாவட்டங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நியமிக்கும் பொழுது ஆதி திராவிடர் வகுப்பினரைச் சேர்ந்த அலுவலர்களை நியமிப்பதற்காக தனி ஒதுக்கீடு ஏதுமில்லை. ஆயினும் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த அலுவலர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களாக நியமிக்கப்படுகின்றார்கள்.

திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழகத்திலுள்ள மாவட்டங்களில் தற்போது பணியாற்றுகின்ற ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் எண்ணிக்கை என்ன? மாவட்டங்களில் ஆதி திராவிட நலத் துறை அதிகாரிகளை நியமிக்கும் பொழுது ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா? அப்படி உத்தேசம் உள்ளது என்றால் தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்த ஆதி திராவிட நல அலுவலர்களை ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக நியமிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தற்போது இருபது மாவட்டங்களில் நான்கு மாவட்டங்களிலே உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தாழ்த்தப்பட்ட பிரிவையும் ஒரு மாவட்டத்திலே பழங்குடி வகுப்பையும் சார்ந்தவர்கள். தாழ்த்தப்பட்டோர் நலத் துறை சம்பந்தப்பட்ட பிற்பகுதி கேள்விக்குத் தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சரிடமிருந்து பதிலைப் பெறுவதுதான் சிறந்தது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பதவி கொடுக்கும்பொழுது ஒரு பிரிவினருக்கே கிடைக்காமல் அதில் பல பிரிவுகள் இருக்கின்றன. எல்லாப் பிரிவினருக்கும் கிடைக்கின்ற அளவில் அரசு பார்த்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத்தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிர்வாக நலனை உத்தேசித்து மாவட்டங்களுக்கு நியமிக்கப்படுகிறார்கள். அதிலே தாழ்த்தப்பட்டவர்கள் இடம் பெறுகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் அவர்கள் என்ற காரணத்திற்காக மாவட்டங்களில் போடுவது இல்லை. ஆகையினாலே நிர்வாக நலனுக்கு ஏற்ப நாம் போடுகின்றபொழுது அதில் தாழ்த்தப்பட்டவர்களும் இடம் பெறுகிறார்கள். ஆகையினாலே அது பிரிவுவாரியாகவோ அல்லது பகுதிவாரியாகவோ நியமிப்பது சரியாகாது.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆதி திராவிடர்கள், பிற்பட்டவர்களிலே மாவட்ட ஆட்சித் தலைவர்களாக நியமிப்பது வரவேற்கத் தக்க ஒன்று. காந்திஜி அவர்களுடைய கனவு நனவானது கண்டு மகிழ்ச்சி அடையக் கூடிய நிகழ்ச்சிதான். இருப்பினும் அப்படி நியமிக்கப்படுகின்றவர்கள் ஆதிதிராவிடர்கள், மற்றவர்கள் என்று பாரமட்சமற்ற முறையில் நடந்து கொள்கிறார்களா என்பதை அரசு கண்காணிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1987 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: : துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் நான் சொல்ல விரும்புவது Recruitment is different from placement வேலைக்கு எடுக்கிற பொழுதுதான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கீடு. Placement—எங்கே அவர்களை வேலையில் அமர்த்த வேண்டுமென்பது அந்தந்த வேலையினுடைய நிமித்தங்களைப் பொறுத்தும், நிர்வாக நலனை ஒட்டியும் வருகிறது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களாகத் தாழ்த்தப்பட்டவர்களோ, பிற்படுத்தப்பட்டவர்களோ நியமிக்கப்படுகிறார்கள் என்றால் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற காரணத்தினாலே அல்ல. நிர்வாக நலனை ஒட்டி நியமிக்கப்படுவதனால் இன்சிடென்டலாக அது வருகிறது. அப்படித்தான் அதை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படிப் போடப்படுகிற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொது நன்மையோடுதான் நடந்து கொள்கிறார்கள்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, குரூப்—1லேயிருந்து இந்திய ஆட்சிப் பணித் துறைக்கு சிபார்சு செய்கின்றபொழுது தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று தனியாக ஒதுக்கீடு எதுவும் பரிசீலிக்கப்படுகிறதா? ஆம் என்றால் விவரம் சொல்ல அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.

அரிசி குருணையை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லத் தடை.

62—(*வினா எண் 13351)—திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலிருந்து அரிசி குருணையை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்வதை தடை செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலிருந்து அரிசி குருணையை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்வது தற்சமயம் தடை செய்யப்படுவதில்லை. தேவை ஏற்படின் அரசு ஆவன செய்யும்.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரிசி ஆலைகளில் செய்கின்ற குருணைகளை 3 மாதங்களுக்கு ஒரு முறை மண்டலங்களில் எல்லாம் டெண்டர் விடும்போது, பெரும்பாலான மண்டலங்களிலே வெளி மாநிலங்களிலே உள்ளவர்கள் அதிலே கலந்துகொண்டு, குருணைகளை டெண்டர்